**கேகாலை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 29 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வறிக்கை 2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கேகாலை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் காணி மற்றும் கட்டிட பெறுமதி ரூபா 160,354 தொகை குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் கணக்குகளை தயாரிக்கும் போது சரி செயவதாக அறிவிக்கிறேன். |

### 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 2015 மற்றும் 2017 ஆண்டு காலத்தினுள் வைப்புச் செய்யப்பட்ட எனினும் காலாவதியான ரூபா 174,576 ஆன 2 கைத்தொழில் வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிருத்தற் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளனவா என பரிசோதித்து தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 4 வாகனங்களின் எரிபொருள் பாவனையை பரிசோதித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதனையை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 (i) பிரிவு | ஏற்றுக் கொள்ளக் கூடிய முற்பண கொடுப்பனவிற்கான காப்பொன்றை முன்வைக்காது 04 கைத்தொழில்களிற்கு ஒப்பந்த தொகையின் 20 சதவீத முற்பணமாக கூட்டுத் தொகை ரூபா 478,831 செலுத்தப்பட்டிருந்தது. | பிணை முறி ஒன்றை பெற்றுக் கொண்ட பின்னர் ஒப்பந்தத்திற்காக முற்பணம் செலுத்த வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,121,179 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,303,136 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,141,361 | 3,270,677 | 2,295,497 | 975,055 | 3,257,700 | 3,126,224 | 2,317,130 | 998,819 |
| (ii) | வாடகை | 559,200 | 00 | 00 | 96,341 | 128,000 | 106,000 | 120,360 | 96,341 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 500,000 | 635,500 | 635,500 | 0.00 | 600,000 | 615,615 | 615,615 | 0.00 |
| (iii) | ஏனைய வருமானம | 65,244,846 | 75,580,468 | 39,955,840 | 47,497,775 | 57,330,000 | 74,140,516 | 38,895,644 | 39,735,670 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஓராண்டை விஞ்சிய காலமாக நிலுவையாக காணப்படும் வீதவரி மற்றும் ஏக்கர் வரி ரூபா 893,910 இனை அறவிட நடவடிக்கை எடுத்து இருக்கவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அந் நிலுவை தொகையை அறவிட அல்லது பதிவழிக்க ஏனும் நடவடிக்கை எடுப்பதாகவும், ஏனைய வீதவரி அலகிற்காக ஆதனத் தடை செய்யும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கிறேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மொரொந்தொட்ட வியாபார கட்டிடத் தொகுதியின் கடையறை குத்தகைக்காரர்களிடமிருந்து 2006 மற்றும் 2009 இடையிலான காலத்திற்குரிய நிலுவை கடையறை வாடகை பெறுமானம் ரூபா 95,989 ஆனது. இது தொடர்பாக உடன்படிக்கையின் 1 ஆம் பிரிவு பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | அறவிட முடியுமான பணத்தை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும், அறவிட முடியாத பணத்தை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

### 2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிற்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 9,057,480 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 35,138,314 ஆனது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்திலிருந்து 2020 ஆண்டினுள் ரூபா 3,220,895 தொகையொன்று கிடைத்துள்ளதுடன், முத்திரைக் கட்ட பணத்திலிருந்து 2020 ஆண்டினுள் ரூபா 26,661,445 தொகையொன்றும் கிடைத்துள்ளதாகவும், எஞ்சிய நிலுவையை அழைப்பித்துக் கொள்ள கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட 42 உப விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் வாராந்த சந்தைக்கு மாத்திரம் உப விதியொன்று 2013 ஆண்டின் போது விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

#### (ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் சபைக்கு சொந்தமான ஆதனங்களை இனங்காணுதல், சுவீகரித்தல் மற்றும் ஆவணப்படுத்த திட்டமிட்டிருந்த போதும், உறுதிகள் இல்லாதிருந்தமை மற்றும் உறுதிகளில் குறைபாடுகள் காணப்பட்டதனால் அந் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை இனங்கண்டு ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேட்டிலுள்ள சுடுகாடுகளில் சில சுடுகாடுகளின் நிலையான தன்மையை உறுதி செய்ய உறுதிப் பதிவேட்டில் ஒப்படைக் கட்ளையுள்ளதுடன் எஞ்சிய சுடுகாடுகளின் உரிமையை உறுதி செய்து கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்க எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

#### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொருத்தமான காணியொன்றை தேடிக் கொள்ள முடியாததன் காரணமாக விற்பனை பெறுமதியுள்ள உக்கலடையா கழிவுகள் தவிர ஏனைய கழிவுகள் | கழிவு முகாமைத்துவத்தை முறையாக்க வேண்டும். | சிறிய நகர வியாபார நிலையங்களிலிருந்து உக்கலடையும் கழிவுகள் ஒன்று திரட்டலை சபை மேற்கொள்வதுடன், அக்கழிவுகளை தற்போது கொம்போஸ்ட் உற்பத்திக்கான முறைமையொன்று |

| | | |
|---|---|---|
| சேர்க்கப்பட்டிருக்கவில்லை. உக்கலடையும் கழிவுகள் உயிர் பாத்தியொன்றிற்கு வெளியிடல் மற்றும் திறந்த எரிப்பு மூலம் அழிக்கப்பட்ட போதும் அதற்காக வருமானம் ஈட்டக் கூடிய முறையான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்க சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | திட்டமிடப்படுகின்றது. வியாபார நிலையங்கள், வீடுகள் மற்றும் அதிகார எல்லையில் பாடசாலைகளிலிருந்து வெளிப்படுத்தும் உக்கலடையும் கழிவு அந் நிலையங்களிலே முகாமைத்துவம் செய்து கொள்ள சந்தர்ப்பங்கள் வழங்கியுள்ளதுடன், அது தொடர்பாக தொடர்ச்சியாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் சபையினால் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

**(ஈ) சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மலசல கழிவுகளை வெளியிடுவதற்காக சபைக்கு சொந்தமாக பொருத்தமான இடமொன்று இல்லாததனால் காணியொன்று அல்லது இடமொன்று உள்ளவர்களுக்கு மாத்திரம் மலசல கழிவு சேவை வழங்கப்பட்டுள்ளது. | மலசல கழிவுகளை வெளியிடுவதற்காக பொருத்தமான இடமொன்றை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். | நகரமயம் குறைந்த கிராம பகுதிகள் முழுவதும் பிரதேச சபை அதிகார பிரதேசம் விருந்து காணப்படுவதால் பெறும்பாலான மக்களுக்கு தங்களது வீட்டுத் தோட்டத்திலேயே கழிவுகளை அகற்ற இடமொன்றை அமைத்துக் கொள்ள முடியுமாகவுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3.2 முகாமைத்துவம் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 திகதி பெறவேண்டிய 3 ஆண்டுகளிலும் குறைந்த கைத்தொழில் கடன்படுனர் ரூபா 478,645 மற்றும் 3 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 658,773 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதி ஓராண்டை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 4,197,338 ஆனதுடன் அவற்றில் ஆண்டு 2 மற்றும் 3 இற்கிடையிலான ரூபா 3,287,071 உம் ஆண்டு 4 மற்றும் 5 இற்கிடையிலான ரூபா 910,267 ஆன கடன்கொடுனர் மற்றும் வைப்புக்களும் ஆனது. | பழைய செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியன்று 05 பதவி வகைகளிற்குரிய நிரந்தர ஆளணியில் 07 வெற்றிடங்கள் மற்றும் 05 மிகை ஆளணியுமானது. வேலை நிர்வாகத்தர் பதவி 2019 ஜுலை 30 திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன் கனரக வாகன இயந்திர இயக்குனர் ஒருவரையும் ஆட்சேர்திருக்கவில்லை. அவ்வாறே காவலாளி பதவியும் 2019 ஜுன் 30 திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அதற்காக ஒப்பந்த சேவை அடிப்படையில் ஊழியர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | முக்கியமான வெற்றிடங்களை நிரப்ப மற்றும் மிகை ஆளணியினை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் | வேலை நிர்வாகத்தர் பதவிக்காக புதிக ஆட்சேர்ப்பு சந்தர்ப்பம் இல்லாததனால் அப் பதவியில் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக சிரேஷ்ட சேவை அலுவலர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். காவலாளர் பதவிக்காக ஒப்பந்த சேவை அடிப்படையில் ஊழியர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், கனரக வாகன இயந்திர இயக்குனர் பதவியிற்கு விண்ணப்பதாரி நேர்முக பரீட்சையில் சித்தியடையவில்லை என அறிவிக்கிறேன். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டு பாதீட்டிற்கமைய வாகனங்களிலிருந்து வருமானம் பெற்றுக் கொள்ள எதிர்பார்திருந்த போதும் ஜே.சீ.பீ இயந்திரம், டெக்டர், பாதை தளர்த்தி மற்றும் மின் உற்பத்தி பொறிகளிலிருந்து எதிர்பார்த்த வருமானத்தில் முறையே 1.5 சதவீதம் மற்றும் 1.6 சதவீதத்திற்கு இடையிலான வருமானம் ஒன்று ஈட்டப்பட்டிருந்தது. | மதிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மின் உற்பத்தி பொறியை ஏப்ரல் மாதம் மாத்திரம் வாடகைக்கு பெறுதல், ஏனை வாகனங்களில் சில குறைபாடுகள் காணப்படுவதன் காரணமாக வாடகைக்கு வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. |

**3.3.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொது செயற்பாடுகளிற்காக 2012 ஆண்டில் சபைக்கு கிடைத்திருந்த 01 ஏக்கர் 26.2 | சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை | வேலி அடிப்பதற்கான சபை அறிக்கையை அங்கீகரித்து மதிப்பீடு தயாரிப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | பர்சஸ் அளவான காணி ஒன்று பாதுகாப்பின்றி புற்கள் நிரம்பியிருந்ததுடன் எல்லைத் தூண்கலிட்டு காணியை பாதுகாத்து பயனுள்ள நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த கவனம் செலுத்தியிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | குறித்த உத்தேசம் தொழிநுட்ப அலுவலரிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடங்கிய 14 சுடுகாடுகளை சுற்றி வேலியிட்டு பாதுகாக்க முயற்சி எடுத்திருக்காததுடன் நிலையான தன்மையை உறுதிப்படுத்தலிற்கான ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் காணப்படவில்லை. | சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சுடுகாடுகளிற்கு வேலியிட்டு பெயர் பலகை தயாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

-----------------------------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

--------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------- | -------------------- | -------------------------------------- |
| (அ) | 309/4 செலவின விடயத்திற்காக ஒதுக்கீட்டை விஞ்சி ரூபா 63,288,258 செலவிடப்பட்டிருந்தது. | ஒக்கீட்டை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இச் செலவை திட்டவட்டமாக மதிப்பிட முடியாது எனவும் இந்த அன்னளவான மதிப்பீடு மற்றும் உண்மை பெறுவனவுகளின் முரண்பாடு காரணமாக ஒதுக்கீட்டை விஞ்சி செலவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்ய பாதீட்டினூடாக ஒதுக்கப்பட்ட ரூபா 16,500,0000 ஆன மொத்த ஒதுக்கீடு எஞ்சியிருந்தது. | திட்டமிட்ட வகையில் ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்யவும் அவ் ஒதுக்கீட்டை வினைத்திறனாக பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்கையில் சில செலவின தலைப்புகளை செயற்படுத் முடியாது போனதாக அறிவிக்கிறேன். |

## 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை xxiv அத்தியாயத்தின் 1.6 பிரிவு பிரகாரம், 2015 முதல் 2019 ஆண்டு வரையான காலத்தினுள் சேவை தடை செய்தல், சேவை இடை நிறுதல் மற்றும் சேவையை விட்டுச் சென்றதன் மீது அறவிட வேண்டிய ரூபா 221,704 ஆன 05 ஊழியர் கடன்களை அறவிட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவை ஏற்பாடுகள் பிரகாரம் கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப் பணத்தை தீர்க்குமாறு அறிவித்து கடிதம் மூலம் அறிவித்த போதும், இது வரை செலுத்த நடவடிக்கை எடுக்காததனால் மீண்டும் அறிவித்து பிணையாளர்களை அறிவூட்டி பணம் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக 2014 ஆண்டின் போது ரூபா 4,275,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 10 ஏக்கர் காணி அக் கருத்திட்டத்திற்கு பொருத்தமில்லை என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் பரிந்துரைத்திருந்தது. அதன் பிரகாரம் காணியை வேறு பொருத்தமான செயற்பாட்டொன்றுக்கு ஈடுபடுத்தாததன் காரணத்தால் விளைவற்ற சொத்தொன்றாக காணப்பட்டது. | வேறு செயற்பாடிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | 2011 மற்றும் 2015 இடையிலான காலங்களில் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் சபரகமுவ மாகாண சபையிலிருந்து கிடைத்திருந்த ரூபா 41,864,734 பெறுமதியான 06 வாகனங்கள் மற்றும் ரூபா 4,281,000 பெறுமதியான டெக்டர் ஒன்றும் மற்றும் டேலர் ஒன்றையும் சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனங்களை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள பல சந்தர்பங்களில் கோரிக்கை விடுத்து கடிதம் முன்வைத்ததுடன், அமைச்சிற்கு சென்றும் கோரிக்கை விடுக்கப்கட்டது. தற்போது நாட்டில் காணப்படும் சூழ்நிலை சீராகி அரச நிறுவனங்கள் பழைய நிலைக்கு திரும்பியதுடன் குறித்த சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2013 ஆண்டு முதல் ஓட்ட நிலையிலில்லாத ரூபா 625,000 பெறுமதியான டபல் கெப் வண்டியை, மற்றும் ரூபா 346,878 | பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது பராதீனம் செய்ய | டபல் கெப் வண்டியை பராதீனம் செய்ய தேவையான ஆவணங்கள் எதுவும் இல்லாததால் |

| | | |
|---|---|---|
| பெறுமதியான டெக்டர் வண்டியை பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது வேறு பொருத்தமான செயற்பாடு ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆவணங்களை தயாரித்தன் பின்னர் முன் நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாகவும், டெக்டர் வண்டியை பராதீனம் செய்ய குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய குழுவை நியமிக்க அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள கௌரவ தவிசாளர் அவர்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |